2011 நவம்பர்
அணி 08 படை 01
நன்கொடை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னயிணின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்    செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது




**ஜே.வி.பி.யினுள் எந்தப் பிளவுமில்லை, அப்படி பிளவுபட இடமளிக்க மாட்டோம்**

■ தோழர் சோமவன்ஸ

**பக்கம் 04**




**ராஜபக்ஷ ஆட்சியின் நெருக்கடியும் இடதுசாரிகளின் பொறுப்பும்**



**பக்கம் 06**

# அரசாங்கத்தின் மோசடியான வரவு செலவு திட்டம்

மகிந்த ராஜபக்ஷ அரசினால் நவம்பரில் சமர்பிக்கப்படவுள்ள வரவு - செலவு திட்டத்திற்கு முன்பே அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கட்டணங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் 2012 ம் ஆண்டு வரவு - செலவு திட்டம் அர்த்தமற்ற வெற்றுத் தாளாகப் போகும் என தெரியவருகிறது.

அரசு முதலில் மதுபானம் மற்றும் சிகரட்டின் விலையை அதிகரிக்கப்பட்டு அதன் பின்பு பெற்றோலியத்தின் விலை உயர்த்தப்பட்டது. பெற்றோல், டீசல், மண்ணெண்னை போன்றவற்றின் விலை அதிகரிக்கப்பட்டதால் கண்டிப்பாக ஏனைய அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படுவதை தவிர்க்க முடியாது. குறிப்பாக பொதுமக்களுக்கான போக்குவரத்து கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என உரிய சாரார் இப்பொழுதே அளுத்தங்களை கொடுத்த வண்ணம் உள்ளனர்.

இவற்றுக்கிடையில் எதிர்வரும் ஜனவரியில் திட்டமிட்டவாறு மின்சாரக் கட்டணம் உயர்தப்படும் என கூறப்பட்டுள்ளதால் அதன் பலனாக மீண்டுமொரு முறை அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் சேவைக்கட்டணங்கள் அதிகரிக்கப்படும். அரசாங்கம் தனது பொருளாதார நெருக்கடியை தனித்து கொள்ளும் நோக்கில் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி விலை அதிகரிப்புதான் ஒரேயொரு தீர்வாக நினைத்து அத்தியாவசிய பொருட்கள், பெற்றோலியத்தின் விலை மற்றும் மின்சாரம் போன்ற கட்டணங்கள் உயர்த்துகிறது. இதனால் கண்டிப்பாக பொதுமக்கள் பெரும் தாக்கத்திற்கு முகம்கொடுப்பதை தவிர்க்க முடியாது.

ராஜபக்ஷ ஜனாதிபதி நிதியமைச்சர் என்ற ரீதியில் நவம்பரில் வரவு - செலவு திட்டத்தை சமர்பித்தாலும் அரசு 2012 ஆண்டுக்காக ஏற்கனவே பொதுமக்களின் பணத்தை சூறையாடுவதற்கு திட்டமிட்டுள்ளதால் இதனால் மக்களுக்கு எந்தவித பிரியோசனமும் கிடைக்கப்போவதில்லை. குறிப்பாக 2011ம் ஆண்டுக்காக அரசு சமர்பித்த வரவு- செலவு திட்ட த்தில் அடங்கிய யோசனைகள் பெரும்பாலும் வாக்குறுதிகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான திட்டங்களை உரிய முறையில் இயக்கிவருகின்றது.

இந்நிலைமைகளின் மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளுக்கேற்ப அரசு சமர்பிக்கும் 2012 ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் பொதுமக்களுக்கு எந்தவித நன்மைகளும் இல்லாத வெற்றுத் தாளாகப் போகும் என பொருளாதார விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.




**பக்கம் 07**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் விடுதலை முன்னணியின் தீபாவளி வாழ்த்து

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்காவினால் கடந்த 26ம் திகதி தீபாவளி தினத்தை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்து செய்தி வருமாறு

இருளைஒழித்துஒளியைமலரச்செய்வதைசுட்டிக்காட்டும்இன்றைய தினத்திலே (26 ம் திகதியில்) கொடிய நரகாசுரனை ஒழித்துகட்டிய தினமாக உலகவாழ் இந்துக்களின் நம்பிக்கையாகும். இவ்வாறான சிறந்த நிகழ்வை மையமாக வைத்து தீபாவளியை கொண்டாடும் உலகவாழ் இந்துக்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

நாம் வாழும் இத்தருனம் என்பதும் இலங்கை வாழ் மக்களுக்கன்றி உலகவாழ் அனைத்து மக்களுக்கும் இருளிலிருந்த மீண்டு ஒளி–மயமான ஓர் சூழலில் வாழவேண்டும் என்ற தேவை உணரும் சந்தர்ப்பமாகும். நாம் வாழ்வது எமக்குரிய சௌபாக்கியம், விடுதலை மற்றும் ஜனநாயகத்தை மறுக்கப்படும் துர்பாக்கியமான ஆட்சியாளர்களினால் மக்களை இருளில் மூல்கடிக்கப்பட்டுள்ள காலகட்டத்திலாகும். எனவே இத்தினத்தின் பெருமதிப்பை வேறு எந்த காலகட்டத்தையும் விட இன்றைய காலகட்டத்தில் உணரக்கூடியதாகவுள்ளது.

எனவே தீபாவளி தினத்தின் இந்த மையப்பொருளை வெற்றிகொள்வதற்காக அணிதிரளும் தினமாக மன–தில் பதியவைத்துக் கொள்வோம். இத்தினத்தில் தீபாவளி பண்டிகையை கொண்டாடும் எமது நாட்டு மற்றும் உலகவாழ் இந்துக்களுக்கு மீண்டுமொருமுறை எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

## பெற்றோலியம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பை வன்மையாகக் கண்டிக்கிறோம்!

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற் குழு

ராஜபக்ஷ பரம்பரைக்கு முடிசூடும் இவ்வரசாங்கத்தின் நடவடிக்கைகளை கண்டுபிடித்து அவற்றை தோற்கடிப்பதற்கு உரிய அறிவை பெற்றுக்கொள்வது பொதுமக்களினதும் பொறுப்பு என மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டுகிறது.

மக்கள் விடுதலை முன்னணி கடந்த 30ம் திகதி பெற்றோலியம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக வெளியிட்ட ஊடக அறிக்கையில் இக்கருத்துக்கள் அடங்கியிருந்தது. அதில் மேலதிக விடயங்கள் வருமாறு,

ராஜபக்ஷ ஆட்சி ஊழல், மோசடி, வீண்விரயம், போலி திறப்பு விழாக்கள் மற்றும் இவற்றின் பிரச்சார வேலைகளுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்த வண்ணம் இருப்பதால் அந்த சுமையை மக்கள் மீது சுமத்துவதற்காக பெற்றோலியத்தின் விலை அதிகரிக்கப்படுவதை வண்மையாக கண்டிக்கின்றது. 2012ம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்திற்கு முன்பு பொதுமக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகாத மதுபானம் மற்றும் சிகரட்டின் விலை அதிகரிப்பினால் ஆரம்பிக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு வரை நீண்டுள்ளது. நேற்று (29 ம் திகதி) நள்ளிரவிலிருந்து பெற்றோல், டீசல் மற்றும் மண்ணென்னையின் விலை அதிகரித்ததோடு எதிர்காலத்தில் மின்சார கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது. இது எளிதாக நினைக்ககூடிய சம்பவம் அல்ல. வரவு - செலவு திட்டத்திற்கு முன்பு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கட்டணங்களின் விலை அதிகரிக்கப்படுவது எதிர்காலத்தில் பொருளாதார ரீ-தியாக இன்னும் இக்கட்டான நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் சமிஞ்சைகளாக அமையும் என நாம் இந்நாட்டு மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கிறோம். குறிப்பாக பெற்றோலியத்தின் விலை மற்றும் உத்தேச மின் கட்டண அதிகரிப்பு இந்நாட்டு அனைத்து உற்பத்தித்துறையையும் பாதிக்கப்படும் அதேவேளை உள்நாட்டு கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப துறையின் விலை, போக்குவரத்து துறையின் கட்டணம் அதிகரிக்கப்படும். இது பொருளாதார நெருக்கடியை தோற்றுவிக்கும் பணவீக்கம் வரை செல்வதற்கு இடமுண்டு. எல்லா புறங்களிலும் தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள பொதுமக்களின் வருமானத்தை ஒரு ரூபாயினால் ஏனும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத அரசு தமது பிரச்சார நடவடிக்கைகளுக்காக பல கோடி ரூபாய்கள் செலவளித்த வண்ணம் உள்ளது. வீண்விரயமான செலவு-களை செய்து மக்களுக்கு உரித்தான வளங்களை சூறையாடிய வண்ணம் ராஜபகஷ பரம்பரைக்கு முடிசூடும் இவ்வரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆராய்ந்து அதை தோற்கடிக்கும் பொருப்பு பொதுமக்களுக்கும் உள்ளதென்பதை சுட்டிக்காட்டுகிறோம். இல்லாவிட்டால் வெகுவிரைவில் இந்நாடும் சோமாலியா, அல்லது எத்தியோப்பியாவாக மாறுவதை யாராலும் நிறுத்த முடியாமல் போகும். எனவே இவ்வாறு மேலோங்கி வரும் நிலைமைகளை ஏற்கனவே கண்டறிந்து அவற்றை தோற்கடிக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளதென மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்துகிறது.

## மக்களுக்காக கட்சியில் கோஷ்டி கும்பலை தோற்கடிக்க வேண்டும்

ஜே.வி.பி பொதுச்செயலாளர் தோழர் ரில்வின் சில்வா





நாளுக்கு நாள் நலிவடைந்துக்கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு அதனை மூடி மறைப்பதற்கோ அல்லது அபிவிருத்தி என்னும் கனவுகளால் மறைத்துவிட முடியாது எனவும் நாட்டு மக்களை ஏமாற்றும் ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக மக்களை அணித்திரட்டுவதை தடுப்பதற்காக அவர் கட்சியினுள் கோஷ்ட்டி கும்பலை உருவாக்குவதாகவும், மக்களுக்காக அவைகளை தோற்கடிப்பதை தவிர தமக்கு வேறு மாற்று நடவடிக்கை கிடையா-தென ம.வி.மு செயலாளர் தோழர் ரில்வின் சில்வா வலியுறுத்தி கூறியுள்ளார்.

அவர் இக்கருத்தை மக்கள் விடுதலை முன்னணியினால் கடந்த 05ம் தி-கதி கொழும்பு மாளிகாவத்தையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். பெருந்திரலான மக்கள் கலந்துக்கொண்ட கூட்டத்தில் ஜே.வி.பியின் தலைவர்கள் அனை-வரும் கலந்துக் கொண்டனர்.

மேலும் கருத்து தெரிவித்த அவர் மக்கள் விடுதலை முன்னணி உலகத்தில் இருக்கும் பெரிய குடும்பமாகும். இந்த கட்சிக்கு சவால் முடியாததன் இரகசியம் அதுவே. ஜே.வி.பி இருப்பது கட்சி தலைமையகத்தில் அல்ல. தேர்தல் ஆணையாளர் காரியாளயத்தில் பெயர் பட்டியல் ஆவணங்களில் அல்ல. அது எமது கட்சி அங்கத்தவர்களின் இதயங்களிலேயே குடிகொண்டிருக்கிறது.

ஜே.வி.பி யின் ஒரு உறுப்பினர் உயிர் வாழ்ந்தாலும் அவரது ஆழமான இதயத்தில் இருப்பது ஜே.வி.பி யாகும். மக்கள் விடுதலை முன்னணியை ஆதரிப்பது எமது வர்க்கத்தின் மக்களேயாகும். .ஜே.வி.பி.யினுள் பிளவு-களை ஏற்படுத்தி வர்க்கத்தின் நம்பிக்கையை சிதைக்க வேண்டிய தேவை எமது வர்க்க எதிரிக்கே தேவைப்படுகிறது. ஆனால் நாம் மிகத் தெளிவாக தெரிவித்தாக வேண்டும். அப்படியான பொ-றியில் நாம் விழமாட்டோம். எமக்கு எதிரிகளின் தேவைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் கருத்தாடல்களின் மத்தியில் அமிழ்ந்து போக வேண்டிய தேவை கிடையாது. எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பொன்று உள்ளது. அதுத-ான் நாட்டு மக்களுக்காக சோஸலிஷத்தை யதார்த்தமாக்குவதாகும். நாம் அதற்காக பின்வாங்காமல் கடுமையாக செயற்படுவோம்.

## சோஸலிஷ இளைஞர் சங்கம் கொழும்பில் நடத்திய பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்




*இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வை பெற்றுத்தராததால் அரசாங்கத்துக்கு எதிராக சோஸலிஷ இளைஞர் சங்கம் கொழும்பில் பாரிய ஏதிர்ப்பு ஆர்ப்பாட்டதை நடத்தியது. அதில் கலந்து கொண்டவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக கோஷம் எழுப்புவதையே படத்தில் கான்கின்றீர்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
198.'.19 பஞ்சிகாவத்தை வீதி ,கொழும்பு -10 011-2345594
E-mail sensackthynews@gmail.com


## பிளங்கிவாத குழுவா? பரந்துபட்ட மக்கள் இயக்கமா?

முதலாளித்துவத்தின் உதிர்வுடன் உதயமாகும் புதிய சமுதாயத்திற்காக "தாதியின் பணியினை" கையேற்க இருப்பது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணி படையணியான புரட்சிகர இயகக்கமாகும். அது முதலாளித்துவத்தை தோற்கடித்து சோஷலிச சமூகமாற்றத்திற்காக தலைமை தாங்குவதுடன் சோஷலிசத்தை கட்டியெழுப்பும் பணிக்கும் தலைமைத் தாங்கியாக வேண்டும் என்ற பொறுப்புடன் பணியாற்றுகின்றது. இவ்வாறான பணி இலகுவான பணியல்ல. அதற்காக புரட்சிகர கட்சியின் கூர்மையான வழிகாட்டல் தத்துவம் தேவைப்படுகிறது. அந்த தத்துவத்தை வழிபாடாகக் கொள்ளாது அதை நடைமுறையில் சாத்தியமாக்க வேண்டும். வர்க்கபோராட்டத்தின் அனுபவங்களைப் போன்றே போர்குணமுள்ள கட்சியின் அவசியம் ஏற்படுவது மேற்கூறிய விடயங்களினாலாகும். இவ்வாறான சோஷலிச சமூகமாற்றத்தினை மக்களுக்கு தெரியாது செய்யமுடியாது. மக்கள் ஆதரவின்றி அது சாத்தியப்படாது.

அதற்காக புரட்சிகர கட்சியின் பரந்துபட்ட மக்கள் இயக்கம் அவசியமானது. வர்க்கத்திற்கு,பரந்துபட்ட வெகுஜனங்களுக்கு தலைமைத் தாங்குவதற்கும் அதை வழிநடத்துவதற்குமான புரட்சிகர கட்சிக்கான பண்புகளையும் பொதுமக்களின் பண்புகளையும்,புரட்சியின் அவசியத்தையும் புரிந்துக் கொள்ள முடியுமென்றால் மட்டுமே லெனின் கூறியதுபோன்று

"பாட்டாளிவர்க்கத்தின் முன்னணி படையணியை நம் பக்கத்திற்கு வென்றிருக்கின்றோம். பிரதான பணியும் அதுவாகும். இதை நிறைவேற்றாது வெற்றியை நோக்கி முதலாவது அடியினை எடுத்து வைக்கமுடியாது. ஆனால் வெற்றியை நோக்கி இன்னும் வெகுதூரம் செல்லவேண்டும். முன்னணி படையோடு மட்டும் வெற்றியை அடைய முடியாது. ஒட்டுமொத்த வர்க்கமும் புரட்சிகர கட்சியை விரிவான,வெகுஜன இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மக்களை புரட்சியில் இணைத்துக் கொள்வதற்கும் சுலோகங்களையும் தந்திரோபாயத்தையும் கையாண்டாகவேண்டும். வர்க்கத்தின் சுலோகம், பொதுமக்களின் சுலோகம், போன்றன வெவ்வேறாக காணக்கூடியதாயிருந்தாலும் அது அன்றாடத் தேவைகளுடன் பிணைந்திருக்கிறது.

அது பொதுமக்களுக்கு புரிந்துகொள்வதற்கு இலகுவானதாக அமையவேண்டும். ரஷ்யப் புரட்சியின் போது லெனின் கோஷமாக,"மக்களுக்குபாண்! விவசாயிகளுக்கு நிலம்! இராணுவச் சிப்பாய்க்கு சமாதானம்!" கோஷமெலுப்பியது அதனாலாகும். புரட்சியின் வாய்ச் சொல்லை மட்டும் விடும் வெகுஜன இயக்கத்தின் முக்கியத்துவத்தை உணராத அல்லது அதை குறைத்து மதிப்பிடும் சிறுகும்பலுக்கு அல்லது குழுவிற்கோ சோஷலிச சமூகமாற்றத்திற்கான தலைமையைத் தாங்கமுடியாது. புரட்சியை பற்றிப் பேசுவது வேண்டுமென்றால் அழகாக இருக்கலாம். அது மேலோட்டமாக நோக்குகையில் இலகுவானவியமாகவும் இருக்கலாம். புரட்சிகர மற்றும் ரெடிகல்லாகவும் தோன்றக்கூடும். ஆனால் அதற்கு சமூகமாற்றத்திற்காக மக்களை வழிநடத்த முடியாது.


வர்க்கத்தையும் வெகுஜனங்களையும் திரட்டுவதை விடுத்து அந்த கடினமான பணியினை தவிர்த்து சிறுகும்பலின் அற்பணிப்புகளின் மூலமாக அதிகாரத்தை கைபற்றுவதற்கு நினைக்கும் குழுக்களை உலக இடதுசாரி வரலாறு முழுவதிலும் காணக்கூடியதாயிருக்கிறது. பிலங்கிவாதம் அதிலொன்றாகும். இன்று எமக்குத் தேவைப்படுவது பிலங்கிவாத சிறுகுழுக்களின் நடவடிக்கைகள் அல்ல. பரந்துபட்ட மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்பி அதனை தலைமை தாங்ககூடிய முன்னேறிய இடதுசாரி இயக்கமாகும்.

"எம்மைஅழித்தாலும் எமதுகுரல் ஒயாது" எனும் நூலில் 57ம் பக்கத்தில் தோழர் ரோகண விஜேவீர இப்படிக் கூறுகிறார். "நாம் பிலங்கி வாதத்தை ஒதுக்கியுள்ளளோம். தோழர் லெனின் அதை பலதடவைகள் எழுதியுள்ளார். "லூயிபிலங்கி" கற்பனாவாத புரட்சிவாதியாகும். இரகசிய புரட்சிகர இயக்கங்கள் பலவற்றுக்கு தலைமை தாங்கிய அவர் சிறிய புரட்சிகர குழுவின் உதவியுடன் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முயற்சித்ததோடு புரட்சிகர போராட்டத்தில் வெகுஜன இயக்கங்களின் முக்கியத்துவமிக்க பங்கினை தெரிவுசெய்வதிலும் தோல்விக் கண்டார்"

தற்போது தோன்றியுள்ள நவீன பிலங்கிவாத குழுக்களின் மார்க்ஸிசமல்லாத கருத்துகளால் பாட்டாளிவர்க்க கட்சி கவனமாயிருத்தல் வேண்டும் விளையாட்டிற்காக போராட்டத்தைப் பற்றிப் பேசுகின்ற புரட்சிகர கோஷத்தை பிதற்றுகின்ற கற்பனாவாத குழுக்களுக்கு பதிலாக புரட்சிகர இயக்கம் எவ்வளவு கடினமென்றாலும் தமது ஸ்தானத்தின் தலைமையிலான விரிவான வெகுஜன இயக்கமொன்றை கட்டியெழுப்பியாக வேண்டும். வெகுஜனங்களை புரட்சியின் பங்காளிகளாக மாற்றக்கூடியவிதத்தில் தந்திரோபாயங்களை வகுக்கும்போது தவறுகளுக்கு அஞ்சாது தவறுகளை திருத்திக் கொண்டுசெயற்படும் அரசியல் இயக்க போராட்டத்தின் முடிவில் வெற்றிப் பெறும் மக்கள் விடுதலை முன்னணி செல்ல வேண்டியதும் அதே வழியிலாகும்.

## யாழ் பல்கலைகழக மாணவ தலைவர் தாக்கப்பட்டமையானது ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்

■ சோஸலிஷ இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்க



யாழ் பல்கலைகழக மாணவத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலன் கடந்த 16ம் திகதி யாழ் நகர மத்தியில் மிலேச்சதனமான முறையில் தாக்கப்பட்டார். இத் தாக்குதலை மிக வண்மையாக கண்டித்து சோஷலிச இளைஞர் சங்கம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டது. அதன் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்க அவர்களால் வெளியிட்ட அந்த அறிக்கையின் முழுவிபரம் கீழ் வருமாறு.

யாழ்ப்பாண பல்கலைகழகத்தின் மாணவர் பேரவையின் தலைவர் தோழர் சுப்பிரமணியம் தவபாலனை கடந்த 16ம் திகதி பட்டப் பகலில் யாழ் நகர மத்தியில் வைத்து மிருகத்தனமாக தாக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதலை சோஷலிச இளைஞர் சங்கம் மிக வண்மையாக கண்டிக்கிறது.

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் சிவில் செயற்பாட்டாளர்கள் மீது இப்படியான தாக்குதல்கள் அதிகரித்துள்ளது. இப்படி நடக்கும் போது அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் சுமுக சிவில் நிலமைகளை தோற்றுவித்துள்ளதாக கூறுகின்ற போது இப்படியான தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. இது வடக்கிற்கு மட்டும் உரித்தான விடயமல்ல. அரசாங்கம் தெற்கில் பாதாள கோஷ்டிக்கு, பாதாள காடையர் அரசியலுக்கு இடமளிக்கப் போவதில்லையென கூறிக் கொண்டுள்ள போதும் துப்பாக்கிகள் இயங்குகின்றன. கொலைகள் இடம்பெறுகின்றன.


உதயன் பத்திரிகையின் ஆசிரியர் குகநாதன் அவர்கள் அவரது அலுவலகத்தின் அருகில் வைத்து மிக கடுமையாக தாக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு மயிரிலையில் உயிர் பிழைத்தது யாவரும் அறிந்த உண்மையாகும் இப்போது அந்த அனுபவத்தின் அடுத்த பலியாக யாழ் பல்கலைகழக மாணவர் பேரவையின் தலைவர் தவபாலன் மீது ஏவப்பட்டிருக்கிறது.

இந்த சம்பவத்தின் மூலமாக மீண்டுமொரு முறை உறுதிப்படுத்துவது, யாழ்ப்பாணத்தில் எந்தவிதமான ஜனநாயக செயற்பாடுகளுக்கும் இடமில்லை என்பதாகும். வடக்கிற்கு சாமாதானம் வந்துள்ளதெனவும், வடக்கிற்க்கு வசந்தம் வந்துள்ளதெனவும், யாழ்பாணத்தில் எவருக்கும் அச்சம் பயமின்றி நடமாடித் திரியலாம் என்று கூறுகின்ற அரசாங்கம் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக கூறப்போவதென்ன என்பது சிக்கல் நிறைந்ததாகும்.

வடக்கில் இளைஞர் யுவதிகள் 60-70 தசாப்தங்களில் பிரிவினைவாத அரசியலை நோக்கி தள்ளப்பட்டது அவர்களுக்கிருந்த குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளையும் அப்போதிருந்த அரசாங்கம் பறித்ததன் மூலமே தோன்றியதென்பது எமக்குத் தெரியும். 30 வருட யத்தம் முடிவடைந்ததன் பின்னர் தற்போதைய வடக்கில் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு மீதான இப்படியான தாக்குதல்கள் வழிசமைப்பதென்ன? அதன் ஆரம்ப தவறுகளை நோக்கியே மிண்டும் செல்கிறதென நாங்கள் அறிவுறுத்துகின்றோம். சோஷலிச இளைஞர் சங்கத்தால் அண்மையில் அதாவது ஆகஸ்ட் 01ம் 02ம் திகதிகளில் கிளிநொச்சியில் நடத்திய விளையாட்டுப் போட்டிக்கு கூட அரச படைகள் இடையூறு விளைவித்தமையானது கோடிட்டு காட்டுவது வடக்கில் ஜனநாயகம் மலரவில்லை அவர்களது ஒன்று கூடும் உரிமை பறிக்கப்பட்டள்ள தென்பாதாகும். அவை அனைத்தையும் ராஜபக்ஷ அரசாங்கம் பறித்தள்ளது.

வடக்கில் தொடர்ச்சியாக இடம்பெறும் இப்படியான மக்கள் விரோத சம்பவங்கள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டமென நாம் அரசாங்கத்தை வலியுறுத்தக்கின்ற அதேவேளை நாம் ஜனநாயக செயற்பாடுகளுக்கு இடமளிக்கும் படியும், அதேவேளை அரசாங்கத்தின் துஷ்டத்தனமான அரசியலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக அணிதிரளும்படி முழு நாட்டு மக்களிடமும் கேட்டு கொள்கின்றோம்.


## பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும்படி வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணியின் மகளிர் அமைப்பு கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி.யினுள் எந்தப் பிளவுமில்லை,

மக்கள் விடுதலை முன்னணியின் தற்போதைய குழுவாதம் தொடர்பாக கட்சியின் தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க அவர்களுடனான சிறப்பு செவ்வி



***செஞ்சக்தி: ஜே.வி.பி.யில் கருத்து முரண்பாடு உள்ளதாகவும் அது ஜே.வி.பி முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டு சேருவதற்கு எடுத்த முயற்சியினால் ஏற்பட்டதெனவும் அண்மையில் ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது. அப்படியான முயற்சி எடுக்கப்பட்டிருந்ததா என்பதை கட்சியின் தலைவர் என்ற வகையில் தெளிவுபடுத்துவீர்களா?***

தோழர் சோவன்ச அமரசிங்க: மக்கள் விடுதலை முன்னணிக்குள் பிரச்சினைகள் ஏதும் கிடையாது. மக்கள் வீடுதலை முன்னணியிலிருந்து சிலர் வெளியேறியுள்ளனர். அவ்வாறாக வெளியேறியவர்கள் தமது இருப்பிற்காக பரப்புரை செய்யும் கருத்தே மக்கள் விடுதலை முன்னணிக்குள் பிளவு என்பதாகும். நீங்கள் கூறியது கூட அவர்களின் கருத்தாகும். அந்த கருத்திற்கும் எங்களது கருத்திற்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளது. அவர்கள் பல கருத்துகளை வெளியிடுகின்றனர். அந்த கருத்துக்கள் மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தல்ல.

ஜே.வி.பி.யின் மத்திய குழுவிலிருந்து சிலர் விலகியுள்ளனர் என்றும் கட்சியை கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் ஊடகங்களில் கூறியிருக்கிறார்கள். இந்த ஊடக அறிக்கை தவறானதெனவும் ஊடக அறிக்கையை மறுத்தும் அவர்கள் அறிக்கை விடவுமில்லை. அதனால் இவர்கள் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகியுள்ளதாகவே எமக்கு சிந்திக்க தோன்றுகிறது. இதற்கான காரணமாக ஊடகங்களில் ஜே.வி.பி. கூட்டணி சேரப் போவதாகவும் அதனாலேயே தாம் ஜே.வி.பி.யிலிருந்து விலகுவதற்கு காரணமாக அமைகிறதெனவும் கூறினர். நாம் மிகவும் பொறுப்புடன் கூறுகின்றோம் மக்கள் விடுதலை முனன்ணி எந்தவொரு கட்சியுடனோ தனிநபர்களிடமோ கூட்டணி அமைப்பதற்கு முயற்சி எடுக்கவில்லை. கூட்டணி அமைப்பதற்காக அரசியல் குழுவிலோ, மத்திய குழுவிலோ அல்லது மாவட்ட கமிட்டியிலோ எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஜே.வி.பி. கூட்டுச்சேரப்போவதாகக் கூறப்படுவது முற்றிலும் பொய்யான தகவலாகும்.

அவ்வாறனதோர் முடிவு இருந்திருக்குமானால், முயற்சி எடுக்கப்பட்டிருக்குமானால் முதலில் கட்சித் தோழர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதேபோன்று நாட்டு மக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதேபோன்று ஊடகங்களும் அறிவித்திருக்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் கூட்டணி அமைக்க போவதென்றால் அதை நாட்டிற்கு சொல்லி, மக்களுக்கு ஊடகங்களுக்குச் சொல்லியே மேற்கொள்வோம். அதனால் நான் மிகவும் தெளிவாக கூறுகின்றேன் மக்கள் விடுதலை முன்னணியானது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்த மட்டத்திலும் கூட்டணி அமைப்பதற்கு முயற்சி எடுக்கவில்லை.

***செஞ்சக்தி: சிலர் ஜே. வி. பி. யின் தலைமைத்துவத்தை மாற்ற வேண்டுமென கருத்துத் தெரிவித்து கட்சியின் அதிகாரத்தை கைபற்றியுள்ளதாகக் கூட அண்மையில் செய்திகள் வெளியானது. உண்மையில் அப்படி ஏதும் நடந்துள்ளதா?***

தோழர் சோமவன்ச அமரசிங்க: தமக்கு கட்சியொன்றை அமைக்க முடியுமென நினைத்துக் கட்சியிலிருந்து வெளியேறி அதைச் செய்ய முடியாது வங்குரோத்தடைந்துள்ள இவர்கள் ஊடகங்கள் மூலமாக பலவிதமான பொய்களையும் புரட்டுக்களையும் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர். மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைத்துவத்தை மாற்ற வேண்டுமென்றால் அதை மக்கள் விடுதலை முன்னணியின் அங்கத்தவர்களின் விருப்புக் கேற்பவே செய்தாக வேண்டும். அப்படியின்றி அதிகாரப் பேராசைப் பிடித்த சிறு கோஷ்டியொன்றின் தேவைகளுக்கேற்ப அல்ல. நாம் கடந்த பெப்ரவரி மாதம் 10ம் திகதி கட்சி மாநாட்டை சுகததாச உள்ரங்கில் நடத்தினோம். அந்த மாநாட்டில் தான் தற்போதைய தலைமைக் குழுவினை கட்சி அங்கத்தவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். எங்களில் எவர்க்கும் தலைவர் பதவிகளை கட்டிப் பிடித்து கொண்டிருக்கும் தேவை கிடையாது. இது எமக்களித்த பொறுப்பே தவிர பதவியல்ல. இந்த பொறுப்பினை உரிய நேரத்தில் தகுதியானவர்களிடம் ஒப்படைக்க நாம் தயார். அதை அங்கத்தவர்களே முடிவுசெய்வர். இவ்விடத்தில் பதவி ஆசையோ அதிகாரப் பேராசையோ இருப்பது விலகிச் சென்ற நபர்களுக்கேயாகும். கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றுவதே தமது நோக்கமென அவர்களின் பெயரளவிலான ஊடகச் செயலாளர் கூறியிருக்கிறார். அதிலிருந்து இது எமது கட்சியின் யாப்பிற்கு முரணானதும் கட்சிக் கட்டுபாடுகளை மீறுவதுமான செயற்பாடுகளாகும், இது தொடர்பாக எதிர்வரும் நாட்களில் தகுந்த நடவடிக்கை எடுக்க நேரிடும்.

***செஞ்சக்தி: இவர்கள் தாம் இடதுசாரி புரட்சிவாதிகளென்றும் இலங்கையில் புரட்சியை செய்வதில் கட்சிதாமதிக்கிறது என்றும் கூறி வருகின்றனர். இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?***

தோழர் சோமவன்ச அமரசிங்க: இவர்களின் சிறுபிள்ளைத் தனத்தையே இக்கூற்று வெளிப்படுத்துகிறது. இவர்களில் சிலர் மத்திய குழுவுக்கு 2011 பெப் 10ம் திகதியே தெரிவு செய்யப்பட்டனர். அதாவது வெறும் ஆறு மாதங்களே மத்திய குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்டு கடந்துள்ளன. ஆறு மாத அனுபவங்களே இவர்களுக்கு இருக்கிறது. அதனால் இவர்களின் அனுபவமற்ற வீராப்புப் பேச்சில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இப்போது இலங்கையில் புரட்சி செய்யப்யுபோவது தாமென்று, தாம் புரட்சிவாத இடதுசாரிகளென்று கூறுவார்களேயானால் அதை முடிவுசெய்ய வேண்டியது இலங்கை மக்களேயின்றி அவர்களல்ல. அதுபற்றி தெளிவடையவோ புரிந்து கொள்ளவோ முடியாதவர்கள் இவர்கள் என்பதை இவர்களின் மேற்கூறிய கூற்று நிரூபித்துக் காட்டுகிறது. அடுத்ததாக மக்கள் விடுதலை முன்னணி என்பது இந்நாட்டின் இடதுசாரி கட்சியாகும். அதற்கு அப்பாலான இடதுசாரி கட்சியை அமைப்பதென்றால் அது அதிதீவிர இடதுசாரித்துவமாகும். இறுதியாக அது வலதுசாரிகளுக்கே சேவை செய்யும். இது ஒரு அரசியல் நோயாகும் லெனின் அதை 'இளம் பருவ கோளாறு' என்று குறிப்பிடுகிறார்.

***செஞ்சக்தி: தோழர் விஜேவீர கட்சியை ஆரம்பித்த காலப்பகுதியில் பல்வேறு வடிவங்களில் கோஷ்டிவாதம் ஆங்காங்கு தோன்றியுள்ளது. அது பற்றிய உங்களது அனுபவம்?***

தோழர் சோமவன்ச அமரசிங்க: கட்சியில் (கோஷ்டி) குழுவாதம் பற்றிய பொய வரலாறே இருக்கிறது. உங்களுக்கு ஞாபகமிருக்கும் 1971 ஏப்ரல் எழுச்சிக்கு முன்னர் தர்மசேகரா குழுவொன்றை அமைத்தார். 1969-70 காலங்களில் தரமசேகரா கோஷ்டிவாதத்திற்கு தத்துவாத்த அடிப்படை இருந்தது. தோழர் ரோணக விஜேவீர இலங்கை புரட்சியின் வடிவம் ரஷ்ய, சீன, கியூப புரட்சியின் வடிவமாக இருக்க முடியாதென்றும் இலங்கை புரட்சி இலங்கைக்கே உரிய தனித்துவமான வழியை கொண்டிருக்கும் என்ற நிலைப்பாட்டிலிருந்தே புரட்சிகர அமைப்பை கட்டியெழுப்பினார்.

''மக்கள் விடுதலை முன்னணி என்பது இந்நாட்டின் இடதுசாரி கட்சியாகும். அதற்கு அப்பாலான இடதுசாரி கட்சியை அமைப்பதென்றால் அது அதிதீவிர இடதுசாரித்துவமாக மாற்றமடையும். இறுதியாக அது வலதுசாரிகளுக்கே சேவை செய்யும். இது ஒரு அரசியல் நோயாகும் இந்த அரசியல் நோயை லெனின் 'இளம் பருவ கோளாறு' என்று குறிப்பிடுகிறார்.''

அதை மிக இலகுவான முறையில் தெளிவுபடுத்திய தோழர் ரோகண விஜேவீர ரஷ்ய சப்பாத்து எங்களது கால்களுக்கு பெரிதென்றும் சீன சப்பாத்து எங்களது கால்களுக்குச் சிறியதென்று தெளிவுபடுத்தினார். ஆனால் தர்மசேகர ரெடிமேட் சீன புரட்சியின் வடிவத்தை தேர்ந்தெடுத்தார். கிராமிய விவசாயிகள் புரட்சியின் முன்னணி படையென்று குறிப்பிடுகிறார். தளப்பிரதேச கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டார். எனவே இந்த கோட்பாட்டின் அடிப்படையில் குழுக்களை அமைத்தார். அப்படி செய்வது எமது கட்சியின் கொள்கைகளுக்கு முரணானதாகும். அவ்வாறான முறையில் அமைப்புரீதியான அடிப்படைகளை அத்துமீறி சிலர் நடந்துள்ளனர்.

தோழர் ரோகண உள்ளிட்ட கட்சி இந்த குழுவாதத்தினை தோற்கடித்தது. தர்மசேகர குழுவை கட்சியிலிருந்து நீக்கினர். அதன் பின்னர் அவர்கள் கட்சிக்கு எதிரான பல துரோகங்களைப் புரிந்தனர். கட்சியை காட்டிக் கொடுத்தனர். அடக்குமுறைக்கு வழிசமைத்தனர்.

எமது கட்சியினுள் அதன் பின்னர் பல்வேறு வடிவங்களிலான குழுக்கள் தோன்றியது. 70ம் தசாப்தங்களில் தோன்றிய லொக்கு அத்துல உள்ளிட்ட குழுவினர் அவைகளில் ஒன்றாகும். அவர்களின் நோக்கமும் துரிதமான ஆட்சியை கைப்பற்றுவதாகும். அவர்களிடம் அதிகாரப் பேராசை இருந்தது. அது எபப்டியென்றால் அக் குழுவில் டி.டீ. சில்வாவின் மனைவி லொக்கு அத்துலவின் தலைமையிலான புரட்சி நடைபெறும் என்று ஜாதக குறி பார்த்திருக்கிறார். லொக்கு அத்துல ரோகண விஜேவீரவுக்கு எதிராக அவதூறுகளை பரப்பினார், சதி செய்தார். படுகொலை செய்யவும் சதி செய்தார். 1971ம் போராட்டம் ஆரம்பமாவதற்கு லொக்கு அத்துலவின் கோஷ்டியே காரண-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லை,அப்படி பிளவுபட இடமளிக்க மாட்டோம்

மாக இருந்தனர். அது கட்சிக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது.

அதன் பின்னர் சிறையிலும் கோஷ்டிகள் இருந்தன. அதில் பிரதானமான ஒன்றுதான் கேகாலை கோஷ்டி. அவர்கள் கட்சியின் பெயரையும் கூட கொள்ளையடிப்பதற்கு முயற்சித்தனர். அது தோல்வியடைந்தவுடன் மக்கள் சங்கம் எனும் பெயரில் சொற்ப காலத்திற்கு செயற்பட்டனர். பின்னர் 1978ல் 4 பேர் கொண்ட குழு உருவானது. கட்சி அவர்களை உடனடியாக வெளியேற்றியது. மீண்டும் 1994 இலும் கோஷ்டிவாதம் இருந்தது. அதன் காரணமாக கமல் தேசப்பிரிய உள்ளிட்ட பலர் 1995ல் கட்சியிலிருந்து வெளியேறினர். புதிய கட்சி அமைப்பதற்கு பத்திரிகையாளர் மாநாட்டையும் அவர்கள் நடத்தினர். அது அத்துடன் முடிவுக்கு வந்தது. இவ்வாறாக எமது கட்சியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் குழுக்கள் தோன்றியுள்ளன. அவை கட்சிக்கு பெரும் பாதிப்பினையும் ஏற்படுத்தியுள்ளன. ஆனால் அவ்வாறான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குழுவாதத்தை தோற்கடிக்கப்பட்டு கட்சி பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இந் நிலையில் தற்போது தோன்றியுள்ள குழுவாதத்தையும் வெகு சிக்கிரம் தோற்கடித்து நாம் நமது கட்சியை பாதுகாப்போம். அதுபற்றி சந்தேகம் வேண்டாம்.

***செஞ்சக்தி: இவ்வாறான குழுவாத போக்குகள் தோன்றுவதற்கான அடிப்படை காரணமென்ன?***

தோழர் சோமவன்ச அமரசிங்க: அரசியல் கட்சிகளில் வெற்றிபெறும் காலங்களைப் போன்றே தோல்விகளை சந்திக்கும் காலங்களிலும் குழுக்கள் தோன்றுகிறது. இந்தக் குழுக்கள் தோன்றுவதற்கு தனிநபர் துரோகமல்ல காரணம். இதற்கு காரண-

> 70ம தசாபதங்களில் தோன்றிய லொக்கு அத்துல உள்ளிட்ட குழுவினர் அவைகளில் ஒன்றாகும். அவர்களின் நோக்கமும் துரிதமான ஆட்சியை கைப்பற்றுவதாகும். அவர்களிடம் அதிகாரப் பேராசை இருந்தது. அது எபட்டியென்றால் அக் குழுவில் டி.டீ. சில்வாவின் மனைவி லொக்கு அத்துலவின் தலைமையிலான புரட்சி நடைபெறும் என்று ஜாதக குறி பார்த்திருக்கிறார். லொக்கு அத்துல ரோகண வீஜேவீரவுக்கு எதிராக அவதூறுகளை பரப்பினார், சதி செய்தார். படுகொலை செய்யவும் சதி செய்தார். 1971ம் போராட்டம் ஆரம்பமாவதற்கு லொக்கு அத்துலவின் கோஷ்டியே காரணமாக இருந்தனர். அது கட்சிக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது

மாக அகநிலை காரணி அமைகிறது. ஒன்று அதிகாரத்திற்கு உள்ள ஆசை. தம்மை பற்றி அதி மதிப்பீடு காரணமாக, அதிகாரத்தினை அடைவதற்கு குறுக்கு வழியில் செல்லுதல் போன்ற காரணங்களும் குழுக்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைகிறது.

அதேபோன்று அரசியல் இயக்கமொன்று நீண்டகாலமான பின்னடைவை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பங்களிலும் வெற்றியின்றி நீண்ட நாட்களுக்கு ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்கும்போதும் அந்த தோல்விகளையும் பின்னடைவுகளையும் சகித்துக் கொள்ளவும் அரசியல் ரீதியாக புரிந்து கொள்ள் முடியாததன் காரணமாகவும் பல்வேறு கருத்து போக்குகள் தோன்றுகின்றன. அவைகள் அமைப்பு ரீதியான சக்தியாக உருவெடுக்கிறது. பின்னர் அவை கட்சியின் பொதுக் கொள்கை அடிப்படைகளுடன் போராட்டத்தின் காரணமாக விலகிச் செல்கிறது. எப்படியாயினும் இந்தக் குழுவாதமானது புரட்சிகர கட்சிகளுக்கு பெரும் விளைவுகளை ஏற்படுத்துகிறது.

***செஞ்சக்தி: எப்படியாயினும் ஜே.வி.பி க்கு சட்டரீதியான சிக்கல்கள் இருக்கிறதா?***

தோழர் சோமவன்ச அமரசிங்க: இன்று இந்தக் கட்சியின் உரிமைப் பற்றிப் பேசப்படுகிறது.இந்த இடத்தில் விளக்கத்தினை நாம் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டாக வேண்டும். நாம் மக்கள் விடுதலை முன்னணியில் சேர்ந்தது உரிமையை பெற்றுக் கொள்வதற்கல்ல. நாம் ஜே.வி.பியின் அங்கத்தவர்களாக மாறியது மக்கள் விடுதலை முன்னணியை பாதுகாப்பதற்காகும். மக்கள் விடுதலை முன்னணியை வெற்றியை நோக்கி கொண்டுச் செல்வதற்காகும். இந்நாட்டு மக்களை வெற்றியை நோக்கி கொண்டு செல்வதற்காகும். அதைவிடுத்து எமக்கு வேறு எவைகளும் சொந்தமாக்கிக் கொள்வதற்கு அவசியமில்லை.

எப்படியாயினும் இந்த கேள்வியை கேட்பதினால் நாம் பதில் சொல்லியாக வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியை பாதுகாப்பதற்காக அதன் சட்ட ரீதியாக உரிமை சரியான தலைமைத்துவமிடமே உள்ளது. நம்பிக்கைக்குறிய தலைவர்களிடம் வைத்துக் கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளளோம். அதனால் எந்தவிதமான சிக்கலும் இங்கு கிடையாது. மிகவும் பொறுப்புடன் கூறுகின்றோம் பொய் பரப்புரைகளுக்கு மக்கள் ஏமாற வேண்டாம். மக்கள் விடுதலை முன்னணியின் சட்டரீதியான உரிமை தொடர்பாக எதுவிதமான சிக்கலும் கிடையாது நாம் சட்டரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்கின்றோம்.

***செஞ்சக்தி: ஆனாலும் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி தலைமையகத்தின் சட்டரீதியான உரிமை தொடர்பாக சிக்கல் இருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியது இதன் உண்மைத் தன்மை என்ன?***

தோழர் சோவன்ச அமரசிங்க: கட்சியிலிருந்து வெளியேறிய இந்த சிறு கும்பல் எவ்வளவு தூரத்திற்கு வங்ரோத்தடைந்துள்ளார்கள் என்பது இந்த கதைகளிலிருந்து தெளிவாகிறது. எமது கட்சி தலைமையகத்தின் உரிமை எமது கட்சிக்காகும். எமது கட்சியின் சகல அங்கத்துவ தோழர் தோழிகளின் உழைப்பின் மூலமாகவே எமது கட்சியின் தலைமையகத்தை கட்டியெழுப்பினர். குறுகிய நோக்கத்துடனான கும்பலுக்கு சொந்தமாவதற்கு எந்தவொரு காரணமும் கிடையாது. கட்சி தலைமையகம் எமது கட்சியின் பொதுச் செயலாளரின் பெயரிலேயே உள்ளது. அது தனிபட்ட நபருக்கு சொந்தமானதல்ல. அண்மைகாலத்தில் கட்சியின் பெறுமதியான சொத்துக்கள் அனைத்தும் கட்சியின் பொதுச் செயலாளரின் பெயருக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனால் எமது கட்சியின் சொத்துக்கள் எவருக்கும் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. அதன் அனைத்து உரிமைகளும் கட்சிக்கே. கட்சி தலைமையகமும் அப்படிதான். அதனால் எதுவிதமான சட்டச் சிக்கலும் கிடையாது.

***செஞ்சக்தி: கூடிகூடிநாடு நெருக்கடியில் பாதுகாக்க முனவாருங்கள் எனும் தலைப்பின் கீழ் ம.வி.மு புதிய செயற்திட்டமொன்றை முன்னெடுத்திருந்தது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இன்னுமொரு பகுதி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிலையில் தோன்றியுள்ள நெருக்கடி அவற்றிக்கு பாதிப்பினை ஏற்படுத்தாதா?***

தோழர் சோமவன்ச அமரசிங்க: நாம் மிகத் தெளிவாக கூறுகின்றோம் இப்படியான பிரச்சினைகள் ஏற்படும் போது கட்சிக்கு சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாததாகும். அதன் காரணமாக கட்சி முன்னெடுத்துள்ள சில வேலைத் திட்டங்களில் சற்று பின்னடைவு ஏற்படலாம். அதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இப்போது தோன்றியுள்ள நெருக்கடி அவ்வளவு பாரதூரமானதல்ல.

இந்த கட்சி இரண்டு எழுச்சிகளுக்கு முகம் கொடுத்துள்ளது.அதாவது கடந்த 46 வருடங்களில் ஏற்பட்ட இரண்டு நெருக்கடிகள் தான் பிரதானமானவை. 1971ல் ஏப்ரல் மாதம் 05ம் திகதி இவற்றை எல்லாம் கட்சி உரியவாறு கையாண்டது. அப்போது கட்சியை இனியும் கட்டியெழுப்ப முடியாதென கதைகள் நாலாபுறங்களிலும் கேட்டபோது நாம் முகம் கொடுத்த நெருக்கடி. அதேபோன்றுதான் 1989ல் தோழர் ரோகண விஜேவீர என்னைத் தவிர எனது சகோதர அரசியல் குழு உறுப்பினர்கள் அனைவரும் கொல்லப் பட்டிருந்த நிலையில் மக்கள் விடுதலை முன்னணி முடிந்து விட்டது. மக்கள் விடுதலை முன்னணி என்பது ரோகண விஜேவீராவாகும் ரோகண விஜேவீர இல்லாத மக்கள் விடுதலை முன்னணி இல்லையென நாலாபுறங்களிலும் கேட்கும்போது தோன்றியிருந்த மரண நெருக்கடி. இந்த இரண்டு நெருக்கடிகளையே நான் கட்சி எதிகொண்ட பாரிய நெருக்கடியென கருதுகின்றேன். இப்போது தோன்றியிருக்கும் நெருக்கடி மிகச் சிறியதாகும். அந்த மரண நெருக்கடிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது. சிறிதளவேனும் எமது தேர்தல் நடவடிக்கைகள் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளும் பின்னடைவு ஏற்பட்டிருக்குமானால் அவைகளிலிருந்து மீண்டு அந்த வேளைத்திட்டங்களை நாம் வெற்றியை நோக்கி கொண்டுச் செல்வது உறுதியானது.

***செஞ்சக்தி: ராஜபாக்ஷ அரசாங்கத்தின் தான்தோன்றித்தனத்திற்கும் மக்கள் விரோத போக்கிற்கும் எதிராக முன்வரும் எதிர்கட்சியின் அதாவது அரசியல் கட்சி பிரச்சினைகளுக்கு எதிர்கொண்டுள்ளமை இன்றைய நிலையில் ஆளும் கட்சிக்கு சாதகமாக அமையாதா?***

தோழர் சோமவன்ச அமரசிங்க: தெளிவாக மக்கள் விடுதலை முன்னணி முகம் கொடுத்துள்ள பிரச்சினையை காரணமாகக் கொண்டு நன்மையடைவது முதலாளித்துவ ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய கட்சியுமாகும்.

அது பற்றி இன்று கட்சியை விட்டு வெளியேறி மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக உண்மைக்குமாறான அவதூறுகளை பரப்பிவருவோருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களை பற்றி போலியான அவதூருகளை கட்டவிழ்த்துவிடும் நபர்களுக்கு இது புரியாமையானது கவலைக்கிடமான நிலைமையாகும்.கட்சியை விட்டு வெளியேறியோரால் முதலாளித்துவ வர்க்கத்திற்கு சாதகமான நிலை உருவாக்கப்படுகிறது. முதலாளித்துவ வர்க்கத்தால் முதலாளித்துவ ஆட்சியினால் தோற்றுவிக்கப்படுகின்ற அரசியல் வெற்றிடத்தை நிரப்பும் புனிதமான உரிமை புனிதமான தகமை இருப்பது மக்கள் விடுதலை முன்னணியிடமாகும். மக்களை சுரண்டும் முதலாளித்துவ வேலைத்திட்டத்திற்கு எதிராக மாற்று வேலைத்திட்டதை முன்வைக்கிறது.முதலாளித்துவ நடவடிக்கைகளுக்கு எதிரான மாற்று வேலைத்திட்டத்தை நாம் முன்வைக்கின்றோம்."

ஒரு விதத்தில் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. அது அவர்களின் கொந்தராத்தாகும். யுகத்தின் பணி முதலாளித்துவத்திற்கு சாதகமானதாகும். அந்த நிலைமைகளை நாம் நன்றாக புரிந்துக் கொண்டிருகின்றோம். இன்று எமக்குத் தெரியும் நாட்டில் அரசியல் வெற்றிடமொன்று நிலவுகிறது. ராஜபக்ஷ அரசாங்கம் நெருக்கடியில் அமிழ்ந்துபோயுள்ளது. பிரச்சினைகளுக்குத் தீர்வின்றி நகர்ந்துக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக மக்கள் மத்தியில் பாரிய வெறுப்பினை அது ஏற்படுத்தியுள்ளது. இதன்போது ஏற்படுவது பாரிய இடைவெளியாகும். மேலும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் உட்கட்சி முரண்பாடு மூர்ப்படைந்துள்ளது. துண்டு துண்டாக பிரிந்து முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதியீட்டுக் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி தோல்வி கண்டு வருகின்றது. ராஜபக்ஷ அரசாங்கத்தால் தோற்றுவிக்கும் அரசியல் வெற்றிடத்தை நிரப்புவதற்காக இந்த இரண்டு கட்சிகளால் முதலாளித்துவ வர்க்கத்தால் முதலாளித்துவ ஆட்சியினால் தோற்றுவிக்கின்ற அரசியல் வெற்றிடத்தை நிறப்பும் புனிதமான உரிமை புனிதமான தகமை இருப்பது மக்கள் விடுதலை முன்னணியிடமாகும். முதலாளித்துவ வேலைத்திட்டத்திற்கு மாற்று வேலைத்திட்டதை முன்வைக்கிறது.

அதனால் இச்சந்தர்ப்பத்தில் எதிர்கொண்டுள்ள சிறிய பிரச்சினையினால் இந்த வெற்றிடத்தை நிறப்புவதற்கு எவருக்கும் சிறிய காலத்திற்கு அதாவது இரண்டு மூன்று மாதங்கள் ஆகலாம் அதற்கு அப்பால் செல்லாது. அதாவது வெற்றிடத்தை நிறப்புவதற்கு சற்றுத் தடைகள் ஏற்பட்டிருந்தாலும் கூடிய விரைவில் இவற்றை நாம் தோல்வியடையச் செய்வோம். நளைக்குறிய அரசியலை கைபற்றுவோம்.

இந்த கட்சி மக்கள் விடுதலை முன்னணி மக்களின் நம்பிக்கையை வென்றுள்ளது. அதேபோன்று நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துவதற்காக செயற்படும். மக்களை வெற்றியை நோக்கி கொண்டுச் செல்வதற்கு எதுவிதமான ஓய்வின்றி செயறபடுவோமென நாம் உறுதியளிக்கின்றோம்.

செஞ்சக்தி: ம.வி.மு பற்றி மக்கள் மத்தியில் உள்ள சித்திரத்தை மங்கச் செய்வதற்கு எவராலும் முடியாது போயிருக்கிறது. நம்பிக்கையுடன் மக்கள் விடுதலை முன்னணியை நோக்கி பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் கூறும் செய்தியென்ன?

தோழர் சோமவன்ச அமரசிங்க: இந்நாட்டு மக்கள் தளராது நம்பிக்கையுடன் எதுவிதமான சலனமின்றி மக்கள் விடுதலை முன்னணி பற்றிய நம்பிக்கையுடன் உள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியுடன் ஒன்று சேர்ந்து பயணிப்பதற்கு இந்நாட்டு மக்கள் தயாராயிருக்கின்றனர். அது பற்றி எமக்கு திடமான நம்பிக்கை உள்ளது. இச் சந்தர்ப்பத்தில் மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். வெளியாகும் போலி பிரசாரங்களுக்கு ஏமாறாதீர்கள். சூழ்ச்சிகாரார்களிடம் ஏமாறவேண்டாம். நீங்கள் கடந்த சொற்ப காலத்தில் எத்தினை தடவைகள் மக்கள் விடுதலை முன்னணி உடைந்து சிதைந்து போயுள்ளதென கேட்டிருப்பீர்கள். எமக்குத் தெரியும் பத்து இருபது வருடங்களாக இந்த பொய் பிரசாரங்களுக் செவிமடுத்திருப்பீர்கள். ஆனால் உங்களுக்கு தெரிந்த மக்கள் விடுதலை முன்னணி உடைந்தது, சிதைந்து என்ற அனைத்து கதைகளும் பொய்யானது. மக்கள் விடுதலை முன்னணி உடைந்துபோகவில்லை. மக்கள் விடுதலை முன்னணி இரண்டாக பிளவுபடவுமில்லை. இரண்டாக பிளவுபடவும் மாட்டாது. இரண்டாக மாற்ற முடியாது. நாம் அதற்கு இடமளிக்கவும் மாட்டோம். அதனால் மக்கள் விடுதலை முன்னணியுடன் ஒன்றாக இருங்கள். கட்சி உடைந்தது சிதைந்தது என்று சற்று சிறிய காலத்திற்கு முன்னர் கூறியது போல் அனைத்தையும் நிராகரியுங்கள். மக்கள் விடுதலை முன்னணி எனும் பெரும் விருட்சகத்தை பாதுகாப்பதற்காக உங்கள் வெற்றி பெறச் செய்வதற்காக அர்பணிப்புடன் இருக்கிறது. அதற்காக உங்களுக்கு வலுவும் சக்தியும் கிடைக்கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ

## ஆட்சியின் நெருக்கடியும் இடதுசாரிகளின் பொறுப்பும்



இலங்கையின் பின்தங்கிய முதலாளித்துவ முறையை தற்போது சுமந்துச் செல்லும் ராஜபக்ஷ ாவின் ஆட்சி பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. உலகலாவிய ரீதியில் முதலாளித்துவம் வீழ்ச்சியுற்று அதலிருந்து மீண்டெழ முடியாத நிலையில் இலங்கையின் முதலாளித்துவ முறையினுல் அபிவிருத்தியை நினைத்துப் பார்ப்பது கூட கேளிக் கூத்தாகும். ராஜபக்ஷ ஆட்சிக்கு செய்ய முடிந்திருப்பது ஏகாதிபத்திய வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப பொருளாதார நடவடிக்கைகயை முன்னெடுத்து நாட்டில் எஞ்சியிருக்கின்ற பொருளாதார வளங்களை பல்தேசிய கம்பனிகளுக்கு தாரைவார்ப்பதேயாகும். தற்போது தேசிய பொருளாதாரத்திற்கும் தேசியத்துவத்திற்கும் முதலிடம் அளிப்பது தொடர்பான ராஜபக்ஷ ஆட்சியின் புனைவுகள் அனைத்தும் உடைத்தெறிந்த நிலையில் நவ லிபரல் பொருளாதாரத்தை தோழில் சுமந்து செல்லும் நிலை ராஜபக்ஷ ஆட்சிக்கு ஏற்பட்டுள்ளது. அதன் கீழ் பெறுமதியான காணிகளை வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பது, நாட்டை அடகு வைத்து கடன் பெற்று வீண்விரயமிக்கதும் தோல்விகண்டதுமான திட்டங்களை கொண்டுச் செல்லல், அவைகளின் ஒப்பந்தங்களையும் வெளிநாட்டுக் கம்னிகளுக்கு பெற்றுக் கொடுத்தல் போன்றவைகளே ராஜபக்ஷ ஆட்சியின் செயற்பாடுகளாக உள்ளன. சோமாவதி புனித பூமி பிரதேசத்தில் 500 ஏக்கர்

> ***" நாடு முழுவதிலுமுள்ள மக்களின் காணிகளை பல்தேசிய கம்பனிகளுக்கு பெற்றுக் கொடுப்பதனூடாக பாதுகாக்கப்பட்ட வனாந்தரப் பாதுகாப்பு வலயத்திலும் ஹோட்டல்கள் அமைக்கப்போவதையும் விவசாய குளங்கள் மற்றும் வாவிகள் போன்றவற்றை சுற்றுலாத் துறைக்காக தாரைவாத்தல் போன்வற்றின் மூலமாகவும் ராஜபக்ஷ அரசாங்கத்தின் போலியான தேசப்பற்றின் நிர்வாணம் அம்பலப்படுத்தப்பட்டு வருகிறது. இப்படியான நிலைமையில் நாளை இந்நாட்டு மக்களின் எந்தவொரு பிச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு முடியாது"***

காணிகளை அமெரிக்க கம்பனியான டோல் நிறுவனத்திற்கு கையளித்தல் உள்ளிட்ட நாடு முழுவதிலுமுள்ள மக்களின் காணிகளை பல்தேசிய கம்பனிகளுக்கு பெற்றுக் கொடுப்பதனூடாக பாதுகாக்கப்பட்ட வனாந்தரப் பாதுகாப்பு வலயத்திலும் ஹோட்டல்கள் அமைக்கப்போவதையும் விவசாய குளங்கள் மற்றும் வாவிகள் போன்றவற்றை சுற்றுலாத் துறைக்காக தாரைவாத்தல் போன்வற்றின் மூலமாகவும் ராஜபக்ஷ அரசாங்கத்தின் போலியான தேசப்பற்றின் நிர்வாணம் அம்பலப்படுத்தப்பட்டு வருகிறது. இப்படியான நிலைமையில் நாளை இந்நாட்டு மக்களின் எந்தவொரு பிச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு முடியாது என்பதினையும் அதைச் செய்ய முடிவது இலவசக் கல்வியை இல்லாதொழித்து பட்டத்திற்கான கல்வி கடைகளை திறந்தும், இலவசக் சுகாதாரச் சேவையினை படிப்படியாக படு குழியில் தள்ளியும், மக்களின் மானியங்களை வெட்டுவதைத் தவிர வேறு ஒன்றும் சாதிக்க முடியாது.

அதன்போது ராஜபக்ஷ நிருவாகம் மக்களின் ஆதரவுக்குப் பதிலாக வளர்த்துக் கொண்டிருப்பது மக்களின் எதிர்ப்பினையேயாகும். அந்த மக்களின் எதிர்ப்பினை அபகரிப்பதற்கு இவ்வேளையில் முதலாளித்துவ வர்க்கம் தனது மற்றைய பிரதிநிதியான ஐ.தே.கவால் முடியாது என்பது இப்போது தெளிவுபடுகிறது.

அரசாங்கம் படிப்படியாக மக்களின் வெறுப்பிற்கு ஆளாகி வருவதுடன் அது நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இயலாது இருப்பதினாலும், இதன் இன்னொரு பிரதியான ஐ.தே.க தனது உட்கட்சிப் பிரச்சினையினால் நலிவடைந்திருப்பதினாலும், பொதுவாக உலகலாவிய ரீதியில் முதலாளித்துவம் விழ்ச்சியுற்றிருப்பதினாலும் தோன்றிவரும் தோன்றி வந்துக் கொண்டிருப்பது சமூக மாற்றத்திற்கான சாதகமான அகநிலைக் காரணியாகும். தற்போது கொஞ்சம் கொஞ்சமாக தோற்றமடைந்துக் கொண்டிருக்கும் இந்த அகநிலைக் காரணி இன்னமும் புரட்சிகர நிலையை அடையவில்லை. ஆனாலும் அதை நோக்கியே வளர்ச்சியடைந்துக் கொண்டிருக்கிறது. சோஷலிச சமூக மாற்றத்தை நோக்கி மக்களை அணிதிரட்டுவதற்கு சாதாகமான முறையில் மெதுவாகவேனும் தோற்றமடைந்துக் கொண்டிருக்கும் இந்த அரசியல் சூழல் சாதகமாக அமையப்போவது இலங்கை இடதுசாரி இயக்கதிற்கேயாகும். இப்போது மெதுவாக வளர்சியடையும் இந்த சாதகமானச் சூழல் பின்னர் அளவு ரீதியான மாற்றம் பண்பு ரீதியாக மாற்றமடைந்து அவசரமாக புரட்சிக்கான சூழல் தோற்றமடையும் சந்தர்ப்பம் உண்டு. புரட்சிகர இயக்கம் தாங்களது எதிர்கால நடவடிக்கைகள் தயாராகி மக்களை அணிதிரட்ட வேண்டியது, மக்களை தயார்படுத்த வேண்டியது அதற்காகவாகும். அது இலகுவான விடயமல்ல என்பது உண்மையே. புரட்சிகர கோட்பாடு உயிர்ப்புள்ள நடைமுறைக்கு உட்படுத்தி தந்திரோபாய மூலோபாய மாற்று செயற்பாடுகளை தெரிவுசெய்வதுடன் அதை மிகவும் நிதானமாக தைரியத்துடன் முன்னெடுக்க வேண்டும் தீவிர இடசாரி இளம்பிள்ளை கோளாறுகளால் அப் பயணத்திற்கு ஏற்படும் பாதிப்பு பாரியதாகும். என்பதால் இடதுசாரிய இயக்கம் அதை அவதானத்துடன் கவனத்திலெடுத்தாக வேண்டும்.

முதலாளித்துவம் நெருக்கடிக்கு சென்றுக் கொண்டிருக்கும்போது, அது அதன்மூலமாகவே பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு வழிசமைக்கும் அரசியல் நிலமைகள் தோற்றம் பெறும்போது கடுமையாக அஞ்சிவோர் ஆளும் வர்க்கமாகும். முதலாளித்துவ முறையின் நெருக்கடி ஆளும் வர்க்கத்திற்கு மரண பயத்தை கொண்டுவருவது தமது நெருக்கடிக்கு ஒப்பீடாக இடதுசாரி இயக்கம் வலுவாக செயற்படும் நிலைமைகளினாலாகும். முதலாளித்துவ முறை பாரிய நெருக்கடிக்குச் சென்று அதன் இருப்பு பாதிப்புக்கு உள்ளாகும்போது முதலாளித்துவ வர்க்கம், முதலாளித்துவ அரசு, முதலாளித்துவ அரசாங்கம் தமது இருப்பிற்காக கையாள வேண்டிய அனைத்த நடவடிக்கைகளையும் எடுக்கும். சகலவிதமான சதிகளையும் கட்டவிழ்த்துவிடும். அதன்போது முதலாளித்துவ நெருக்கடியை தீர்க்க முடியாததினால் அவர்களது கவனத்தை இடதுசாரி இயக்கம் தமக்கு சவாலாக அமையாத விதத்தில் நலிவடையச் செய்வதற்காகும். அதற்காக அவர்கள் அவர்களிற்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துகிறது. இடதுசாரி இயக்கத்தினுல் தோன்றும் நெருக்கடி முதலாளித்துவத்திற்கு சேவை செய்வதாக அமைவது அப்போதாகும்.

இலங்கை அரசியலில் தற்போதைய கனத்தைப் பற்றி கருத்தில் கொள்ளும்போது தெரிவதாவது, அரச அதிகாரத்தை பிரயோகித்து இடைக்கிடையே நடத்திவரும் தேர்தல்களில் அரசாங்கம் வெற்றிப் பெற்றாலும், தற்போதய சமூக முறைக்கும் எதிரான எதிர்ப்பும் கோபமும் மக்களிடையே அதிகரிக்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. கடந்த மே 30ம் திகதி கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் ஊழியர்கள் மோசடியான ஓய்வு'தியத் திட்டத்திற்கு எதிராக செய்த ஆர்பாட்டத்தில் இந்த எதிப்பும் போர்குணத்தையும் காணக் கூடியதாயிருந்தது. அதன்போது அரசாங்கத்தின் அடக்குமறை ஊழியர்களை அச்சுறுத்த முடியாது போனதுடன் ஊழியர்களின் கோபமும் ஆர்பாட்டமும் அதிகரிக்கவே செய்தது. அதேவேளை நாட்டில் பல பகுதிகளில் ஏற்படும் அமைப்புரீதியற்ற பல போராட்டங்கள் பொலிசை தாக்குதல் மூலமாக மக்களின் எதிப்பு விரிவடைந்து வருவதுடன் அண்மையில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு இரண்டு இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எதிராக தொம்பே பொலிஸ் நிலையத்தை தீவைத்து கொளுத்தினர் இது ஒரு உதாரணமாகும்.

இந்த சம்பவங்கள் கூறுவதாவது மக்களின் எதிப்பு நீருபூத்த நெருப்பாக உள்ளது என்பதையே சுட்டிக் காட்டுகிறது. அது புரிதலுடனான அரசியல் நடவடிக்கைகளுடன் உள்வாங்கப்பட வில்லை. ஆனால் அதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. இது முதலாளித்துவ வர்க்கத்திற்கு பாரிய சவாலாக அமைந்துள்ளது. இவைகள் இடதுசாரி இயக்கத்தின் தலைமையில் போராட முற்படும்போது முதலாளித்துவ முறையின் இருப்பு சவாலுக்குள்ளாகும். அதனால் இடதுசாரி இயக்கம் அதில் தலையிடுவதற்கான சந்தர்ப்பத்தை இல்லாதொழிப்பது முதலாளித்துவத்தின் தேவையாகும். தற்போது மக்கள் விடுதலை முன்னணியில் தோன்றியுள்ள நெருக்கடியை பார்க்க வேண்டியிருப்து மேற்கூறிய அரசியல் நிலைமைகளை கவனத்தில் கொண்டாகும். கட்சியில்யில் இருந்த சிறு கும்பல் கோஷ்டிவாதமாக செயற்பட்டு அதற்கு கட்சியல் இடம் கிடைக்காததினால் அமைப்பு அடிப்படைகளை மீறி கொள்கைகளை மீறி வெளியேறி செயற்பட ஆரம்பித்தானது தற்போதைய

> "முதலாளித்துவம் தமது இருப்பிற்காக பயன்படுத்தி வருகின்றது. ஆதற்காக முதலாளித்துவ உடகங்கள் தமது வர்க்கச் சாபு பணி'களை செவ்வனே செய்ய தொடங்கியுள்ளது. இவ்வாறான சிறிய கும்பல்களின் அரசியல் இருப்பிற்காக ஊடக பிரச்சாரம் அவசியமாகும். அதன்போது இச்சிறு கும்பலை புகழ்ந்தும் அவர்களை மிகைபடுத்தியும் அதேவேளை உண்மையான இடதுசாரி இயக்கத்தை பலவீனப்படுத்தவும், மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்வத்ற்றாக திட்டமிட்ட முறையில் செயற்படுகிறது. கடைசியாக புரட்சி கோஷங்களை கொண்டுள்ள இச்சிறு கும்பல் தெரிந்தோ தெரியாமலோ எதிர்புரட்சிக்கு சேவைசெய்வோராக மாற்றமடைவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்"

நெருக்கடிக்கு காரணமாக அமைகிறது. ஆவர்கள் தமது நோக்கமாக நல்ல கருத்துகளை வெளியிட்டபோதிலும்புரட்சிகர சுலோகங்களை பாவித்தபோதிலும், அந்த போக்குகளை முதலாளித்துவம் தமது இருப்பிற்காக பயன்படுத்தி வருகின்றது. அதற்காக முதலாளித்துவ ஊடகங்கள் தமது வர்க்கச்சார்பு பணிகளை செவ்வனே செய்ய தொடங்கியுள்ளது. இவ்வாறான சிறிய கும்பல்களின் அரசியல்

07 ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தோட்டத் தொழிலாளர்களின் இருப்பு கேள்விக்குறியாகும் அபாயம்!

பெருந்தோட்டப் பயிரான தேயிலைத் தோட்டத் துறை பெரும்நெருக்கடி நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பெருந்தோட்டத்தை நிர்வாகம் செய்யும் கம்பனிகள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களையும், அவர்களின் மனித உரிமைகளையும் கருத்தில் கொள்ளாது கம்பனிகளின் தேவைமட்டும் இலாபம் என்பவற்றை இலக்காக கொண்டு தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன.

தோட்டங்களை பராமரிக்காமை, நலன்புரி சேவைகளை முன்னெடுக்காமை, கூட்டு ஒப்பந்நத்தினூடாக தொழிலாளர்களுக்கு முறையான செயற்றிட்டங்களை முன்னெடுக்காமை, தோட்டத் தொழிலாளர்களின் இருப்பை கேள்விக்குறியாக்குதல், தோட்டங்களை தனியார் மற்றும் முதலாளிகளுக்கு விற்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தல், நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசுடமையாக்குதல் என்னும் போர்வையில் அரசியல் வாதிகளுக்கு விற்பதற்கு இடமளித்தல், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்றல் அல்லது குத்தகைக்குவிடல், தோட்டத் தொழிற்துறையை சீரழித்து உல்லாசபயணத்துறையை ஊக்குவித்தல் , மாற்று பயிர்ச்செய்கை மற்றும் காடு வளர்ப்பை மேற்கொள்ளல் போன்ற திட்டமிட்ட நடவடிக்கைகள் திரைமறைவில் இருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைகள் யாவும் தோட்டங்களை இலக்கு வைத்து அபிவிருத்தி என்ற சூட்சுமமாக தோட்டத் தொழிலாளர்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான திட்டமிட்ட முன்னெடுப்புகள் தோட்டத் தொழிலாளர்களின் எதிர்கால சந்ததியின் வாழ்வையும் கேள்விக்குறியாக்குகின்றது.

### தேயிலைத் தோட்டங்களை பராமரிக்காமை!

தேயிலைத் தோட்டங்கள் தற்போது பாரமரிப்பில்லாத நிலையில் காணப்படுகின்றது. அதாவது தோட்டங்களை கம்பனிகள் பொறுப்பேற்றப்பின்னர் அவர்கள் இலாபத்தில் மாத்திரமே குறியாக உள்ளார்கள். இலாபத்தில் குறியாக கொண்டிருக்கும் கம்பனிகள் தோட்டங்களில் உள்ள பெறுமதி வாய்ந்த மரங்கள், கருங்கற்கள், இயற்கைத் தாவரங்கள், போன்றவற்றை விற்பதை முன்னெடுக்கின்றனர். இவ்வாறு சுவைகண்ட கம்பனிகள் தொடர்ச்சியாக தோட்டப்புறங்களில் உள்ள இயற்கை வளங்களை சுரண்டுவதில் மாத்திரமே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர். தோட்டங்கள் கவனிப்பாரற்று பற்றை காடுகளாகின்றது. தேயிலைச்செடிகள் பராமரிப்பின்றி சூம்பிசுருங்குகின்றன. கொழுந்து ஆரோக்கியமானதாக இல்லை. முன்னர் தேயிலை மலைகளில் வாடிகான்கள் வெட்டப்படும். மழைகாலத்தில் அரித்துச் செல்லப்படும் பசளையடங்கிய வளமான-மண் வடிகான்களில் தேங்கிவிடும். மீண்டும் வெயில் காலத்தில் அவை தேயிலை செடிகளுக்கு உரமாக இடப்படும். இப்படியாக தேயிலைத் தோட்டத்தின் மண்வளம் பாதுகாக்கப்பட்டுவந்தது. அதற்கு மேலதிகமாக செயற்கை பசளை இடப்பட்டும் குறிப்பிட்ட காலத்திற்குள் களை அழிக்கப்பட்டும், மருந்து தெளிக்கப்பட்டும் வந்தன. ஆனால் தற்போது இவை தகுந்த அளவில் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக தேயிலை உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதுடன் தரமான கொழுந்தும் கிடைப்பதில்லை. அதன் காரணமாக தரமான சுவைமிக்க தேயிலையை உற்பத்தி செய்ய முடியவில்லை. அதனால் தரமான தேயிலையை தயாரிப்பதற்கு மேலதிக சுவையூட்டி, நிறவூட்டிகளை சேர்ப்பதாலும், கலப்படங்களை சேர்ப்பதாலும் தேயிலையின் கிராக்கி உலக சந்தையில் வீழ்ச்சி கண்டுள்ளதாக தெறியவருகிறது. அதன் வெளிப்படாக கடந்த காலத்தில் தேயிலை விலை வீழ்ச்சி கண்டது. தரமான தேயிலையை தயாரிப்பதற்கு தேயிலைத் தோட்டங்கள் பராமரிப்பின்மையும் ஒரு காரணம்.



### நலன்புரி சேவைகளை படிப்படியாக கைவிடல்!

தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நலன்புரி சேவைகள் தற்போது படிப்படியாக கத்தரிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் குடியிருப்புகள் புனரமைத்தல், சுகாதார சேவைகளை மேம்படுத்தல், வைத்திய சேவைகளை வழங்கள், தாய்மாருக்கும், கர்ப்பினி தாய்மார்களுக்குமான சத்துணவுத்திட்டம், தொழிலாளர்களுக்கான அரை நேர வேளை உதவி, அங்கவீன தொழிலாளர்களுக்கு இலேசான வேலை, போன்றன முற்றாகவே நிறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பிரசவ தாய்மார்களுக்கு பிரசவ பணம் வழங்கள், நோயாளிகளை வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்துப் பணம் வழங்கள் மட்டுமே தற்போது வழங்கப்பட்டு வருகிறது. ஏனைய அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நலன்புரி சேவைகள் இரத்தானது தோட்டத் தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து ஒதுங்கச் செய்யும் ஒரு நடவடிக்கையாகும்.

### காட்டுமரங்களையும், சிறு ஏற்றுமதி பயிர்களையும் நடுதல்!

தற்போது தேயிலைக்குப்பதிலாக சிறு ஏற்றுமதி பயிர்களான கராம்பு,மற்றும் காட்டு மரங்கள் நடப்படுகின்றன. அத்தோடு தேயிலைக்கு இடையிடையே இறப்பர் கன்றுகளும் நடப்படுகின்றன. அவை வளரும் தருவாயில் தேயிலை தானாகவே அழிந்துவிடும் அபாயம் தோன்றுகிறது. அதனால் தொழிலாளர்களுக்கான வேலை நாட்கள் குறைக்கப்படுகிறது. வேலைநாட்கள் குறைவடையும் போது ஆதாய போனஸ், சேவைக்கால கொடுப்பனவு, ஏனைய கொடுப்பனவுகள் குறைவடையும் இவை நன்கு திட்டமிட்டே செயல்படுத்தப்படுகிறது.

தனியாருக்கும், பணக்காரர்களுக்கும் தோட்டங்களை குத்தகைக்கு விடல். தோட்டப்புறங்களை இலக்குவைத்து உல்லாசப்பயணத்துறையை ஊக்குவித்தல் போன்றன தோட்ட மக்களை தோட்டத் தொழில்த்துறையில் இருந்து ஒதுக்குவதற்கான ஒரு தந்ரோபாயமேயாகும். தோட்டங்களுக்கு கம்பனிகளால் புதிய சுற்றுநிருபம் அனுப்பப் பட்டுள்ளது. அதாவது கிழமையில் 3அல்லது 4 நாட்கள் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதாகும். எனவே கம்பனிகள் முன்னெடுக்கும் இவ்வாறான நடவடிக்கைகள் யாவையும் அவதானிக்கும் போது தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து வெளியேற்றும் ஒரு நடவடிக்கையாகவே கருத வேண்டியுள்ளது. இவைகளைத்தவிர தொழிலாள வர்க்கத்துக்கு இந்த முதலாளித்துவ அமைப்பால் வேறு எதையும் வழங்க முடியாது. இந்த நிலைமையில் இருந்து விடுபட உழைக்கும் வர்க்கம் அமைப்பு ரீதியாக அணிதிரண்டு முதலாளித்துவ முன்றயை தோற்கடிக்க வேண்டும். அப்படி அணித்திரளாமல் உளுத்துப்போன சந்தர்ப்பவாத அமைப்புகளில் தங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் தொழிலாளர்களின் இருப்புக்கு உலைவைக்கப்படுவதை எவராலும் தவிர்க்க முடியாது. எனவே ஊழைக்கும் வர்க்கம், உழைக்கும் வர்க்கத்துக்கு தலைமை வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணியோடு கைக்கோர்ப்பதே காலத்தின் கட்டாயமாகும்.

---

06ம் பக்கம் தொடர் ராஜபக்ஷ

இருப்பிற்காக ஊடக பிரச்சாரம் அவசியமாகும். அதன்போது இச்சிறு கும்பலை புகழ்ந்தும் அவர்களை மிகைபடுத்தியும் அதேவேளை உண்மையான இடதுசாரி இயக்கத்தை பலவீனப்படுத்தவும், மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்வதற்காக திட்டமிட்ட முறையில் செயற்படுகிறது. கடைசியாக புரட்சி கோஷங்களை கொண்டுள்ள இச்சிறு கும்பல் தெரிந்தோ தெரியாமலோ எதிர்புரட்சிக்கு சேவைசெய்வோராக மாற்றமடைவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். முதலாளித்துவ வர்க்கத்தின் இறையாக மாற்றமடைவர். இப்படியான நிலமைகளை மக்கள் உணர்ச்சி வயப்பட்டல்ல அரசியல் அறிவுடன் தர்க்க ரீதியாக பார்க்க வேண்டும்.

இப்படியான சந்தர்ப்பத்தில் எந்தவொரு குழுவாத போக்குகளினால் அமைப்பு ரீதியான செயற்பாடுகளினால் ஜே.வி.பி பலவீனமடையுமென்றால் கட்சி மீதான மக்கள் நம்பிக்ழைக சிதைவடயுமானால் அதன் நன்மைகள் கிடைப்பது இடதுசாரிகளுகல்ல முதலாளித்துவ வர்க்கத்திற்காகும். சிறந்த இடதுசாரிக்காக என்று கூறிக் கொண்டு செயற்பட்டாலும் கடைசியில் கடைசியாக நிறைவேற்றிக் கொண்டிருப்பது முதலாளித்துவ வர்க்கத்தின் தேவைகளை என்றால் பிரச்சினை சிக்கலாக அமையும். ஆதனால் இந்த நிலமைகளை நாம் பார்க்க வேண்டியது சுந்தரமான புரட்சிகர வாய் வீச்சுகளை அல்ல வர்க்கத்தின் நோக்கத்திற்கு வர்க்கத்தின் தேவைகளுக்காகும். இவ்வாறன சந்தர்ப்பங்களில் இடதுசாரி இயக்கத்தினுல் பளவுகளை ஏற்படுத்துவது என்பது எதிரிக்கு சேவை செய்வதேயின்றி வேறொன்றுமலல் என்பதை புரிந்தக் கொண்டாக வேண்டும்.

ஏப்படியாயினும் இலங்கையின் இடதுசாரி இயகக்மான ஜே.வி.பியின் கடமையாக இருப்பது இந்த நெருக்கடி சம்பந்தமாக முழு கவனத்தையும் செலுத்தி அதற்கு வரையறுப்பதல்ல இந்த நெருக்கடியை கட்டுபாட்டுக்கு கொண்டு வருவதுடன் சமூகத்தில் தோன்றியுள்ள அரசியல் நிலமைகளில் அதற்கான தமது பாத்திரத்தை உடனடியாக கைபற்றிக் கொள்வதாகும். ஆதற்காக சக்திகளை அணிதிரட்டி செயற்படுவதாகும். ஆதன்போது கட்சி கொள்கைகள்ள மீறி குழுவாத்தை நியாயப்படுத்தும் போலியான கோஷங்களக்கு செவிமடுப்பதுடன் அதற்கு தேவையான அத்திவசிய கருத்துகளை தெரிவித்துடன் இடைவிடாது தமது அரசியல் பாத்திரத்தை சகிப்பது அத்தியாவசியமான ஒன்றாகும். “வஸ்கா எனப்படும் நாய் செவிமடுக்கும் ஆனால் தொடர்ந்தும் தின்று கொண்டே போகும்” ரஷ்ய கதையொன்றை உதாரணம் காட்டிய லெனின் கூறியதை போன்று இடதுசாரி இயக்கத்தின் பாத்திரத்தை உயிருட்டியாக வேண்டும். வாத்தைகளால் எழும் விமர்சனத்திற்கு இருக்கும் சிறந்த விடை அமைந்திருப்பது, வார்த்தைகளில் அல்ல செயலில் என்பதால் ஜே.வி. பி புதிய சமூக மாற்றத்திற்கான தமது பாத்திரத்தை வகித்து விமர்சனங்களுக்கு நடைமுறையில் பதிலலிப்பதுடன் அது அப்படியே செய்யப்படும். அதனால் இப்போது தோன்றியிருப்பது பிற்போக்கு வாதத்திற்கு சேவகம்புரியும், குழுவாதத்தை, அமைப்பு அடிப்படைகளை மீறியுள்ள, நிலமைகளை தோல்வியுறச் செய்து சரியான பாதையில் காலடி வைப்பதாகும். நெருக்கடியில் அமிழ்ந்துக் கொண்டிருக்கும் ராஜபக்ஷ ஆட்சிக்கு மறைமுகமாக உதவிபுரியும் இடதுசாரி இயக்க கோஷங்களுக்கு மறைந்துக் கொண்டிருக்கு கோஷ்டிவாத கும்பல் வரலாற்று சாக்கடையில் வீழ்வது திண்ணமாகும். முதலாளித்துவ முறைக்கு விடையளித்து புதிய சமூக மாற்றத்திற்காக வழிசமைக்க முடிவது வாய் வீச்சுகளை செய்வோருக்கு அல்ல மக்கள் மத்தியில் அற்பணிப்புடன் செயற்படுவோருக்காகும். இச் சந்தர்ப்பத்தில் அதை செய்ய முடிவது மக்கள் விடுதலை முன்னணிக்கு மட்டுமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் போலி வரவு செலவுக்குப் பதிலாக மக்களுக்கு உண்மையான உரிமைகள் பெற்றுக்கொடுக்க வேண்டும்

■ மக்கள் விடுதலை முன்னணி



இந்த வருடத்திற்காக அரசாங்கம் சமர்ப்பித் வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கு வழங்கிய பல வாக்குறுதிகள் எஞ்சியுள்ளதாகவும் அவைகளில் ஒன்றையேனும் நிறைவேற்றாது 2012ம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு மக்களை ஏமாற்றும் நிதி செப்படி வித்தையாகும் என்று மக்கள் விடுதலை முன்னணி வலியுறுதுகின்றது.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் வரவு- செலவு திட்ட நிதி ஒதுக்கீடு தொடர்பாக கடந்த 19ம் திகதி ஜே.வி.பி யினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக மாநாட்டில் கட்சியின் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார். கடந்த 19ம் திகதி ஜே.வி.பி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரச்சார செயலாளர் தோழர் விஜிதஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் தோழர் சுனில்ஹந்துன்நெத்தி ஆகியோரும் கலந்துக் கொண்டனர்.

## "சே" ஞாபகார்த்தம் வெகு விமர்சையாக



சோஸலிஷ இளைஞர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சே ஞாபகார்த்தம் இம்முறை ஒக்டோபர் 15ம் திகதி கொழும்பு ஜயவர்தன கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா பிரதான ஞாபகார்த்த சொற்பொழிவினை ஆற்றினார்.

இதில் கருத்து தெரிவித்த சோஸலிஷ இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்க கருத்து தெரிவிக்கையில்

உங்களுக்குத் தெரியும் "சே"யை நாம் நினைவு கூறுவது ஞாபகார்த்தத்திற்கு வறையறுக்கட்ட நோக்கத்துடன் அல்ல. நாம் புரட்சிவாதிகளாக புரட்சிவாதி தோழர் சேயின் புரட்சிகர குணவியல்புகளை பேசுவதற்கு மட்டுமல்ல புரட்சியினூடாக புதிய சமூகமாற்றத்தையும் உருவாக்குவதற்காகவே நாம் சேயை இன்றும்,என்றும் நினைவு கூறுகின்றோம்.

## நியமுவாவின் புதிய வெளியீடு




2012ம் ஆண்டுக்கான நாட்குறிப்பு- நன்கொடை ரூபா 100.00

## பெரும் மழையைப் பொருட்படுத்தாது ஜே.வி.பி ஆர்ப்பாட்டத்தில் மக்கள் வெள்ளம்



கடந்த 24ம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் கண்டன பேரணியில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், பெண்கள் மற்றும் இளைஞர் அணிகளை சேர்ந்த பலதரப்பட்ட மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்துக்கொண்டனர்.

கடந்த முறை வரவு செலவு திட்டத்தை முன்வைத்து இந்நாட்டு மக்களுக்கு:வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது 2012ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், வாழ்க்கை செலவுக்கு போதுமான சம்பளத்தை அதிகரிக்கும்படியும் கேட்டு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அதன்போது கருத்து தெரிவித்த அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் வசந்த சமரசிங்க

ராஜபக்ஷ அரசாங்கம் பாதாள கோஷ்டியினதும் சட்டவிரோத வர்த்தக கும்பலின் ஆதிக்கத்தை நாட்டில் நிலைபெறச்செய்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதோடு இந்த நாட்டில் உழைக்கும் மக்கள், விவசாயிகள், மாணவர்கள், பெண்கள் உள்ளிட்ட பொது மக்களின் உரிமைகள் எவற்றையும் வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இதற்கு எதிராக உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றுக்கொடுப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணியுடன் அனைத்து நிறுவன ஊழியர் சங்கமும் போராடுகறதெனவும், வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்கும்வரை போராட்டம் ஓயாது எனவும் அவர் தெரிவித்தார்.

## இலவசக் கல்வியை பாதுகாத்துக்கொள்வதற்காக துணிச்சலுடன் போராடுவோம்!




திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியதிலிருந்து ஜே. ஆர். ஜயவர்தனா ஆட்சியிலிருந்து இதுவரையும் எட்டு தடவைகள் பல்கலைக்கழகக் கல்வித் துறையை தனியார்மயப்படுத்துவதற்கு முயற்சியெடுத்துள்ளதாக சுட்டிக்காட்டும் சோஷலிச மாணவர் சங்கம் இலவசக் கல்வியை பாதுகாப்பதற்காக மிகவும் துணிச்சலுடன் போராடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த 31ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது சோஷலிச மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் நலிந்த ஜயதிஸ்ச இக்கருத்துக்களை தெரிவித்தார்.

## கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்த நினைவுகூறலுக்கு தோழர் ஹந்துன்நெத்தி கட்டார் பயணம்



1989ம் ஆண்டு கார்த்திகை மாதம் அன்றைய ஆட்சியாளர்களான ஐக்கிய தேசிய கட்சியனரால் படுகொலை செய்யப்பட்ட தோழர் ரோஹன விஜேவீரா உட்பட பல ஆயிரக்கணக்கான தோழர், தோழியர்களை நினைவு கூறும் நாள் கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தமாகும். இன்று 22 வருடங்களை கடந்து விட்ட போதும் கார்த்திகை வீரர்கள் இன்றும் அனைவரின் உள்ளத்திலும் ஆணியாக அரையப்பட்டுள்ளார்கள்.

துர்நாற்றம் வீசும் முதலாளித்துவ சமுதாயத்தால் உலகத்தில் வாழும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் வர்க்கத்தினருக்கு ஒருபோதும் விடுதலையையும், உரிமைகளையும் வழங்க முடியாது. அது மட்டுமல்ல முதலாளித்துவ முறையினுள் மனிதனை மனிதனாக கூட வாழவிட முடியாது. என்ற மார்க்ஸின் கருத்துக்களை ஏற்று அதை புரட்சிகரமான மாற்றத்தினூடாக நடைமுறையில் காட்டினார் தோழர் லெனின். அந்த புனிதமான கடமையை இலங்கை வாழ் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு முதலாளித்து முறைமைக்கு எதிராக போராடி மரணித்த தியாகிகளை நினைவு கூறும் கார்த்திகை வீரர்களை நினைவுகூற மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் சுனில் ஹந்துன்நெத்தி கட்டார் நாட்டுக்கு பயணமாகியுள்ளார்.

,யஇல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என்னால் இல 43/43 வலவுவத்த வீதி தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org